[2005 மார்ச் 16

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறியதுபோல, அந்தப் பகுதியிலே அந்தத் தொட்டி பழுதடையவில்லை. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று அரசு பரிசீலிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 174, 175 பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். வினா எண் 176, திரு. ந. கணபதி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

176—

ஆரம்பச் சுகாதார நிலையம்

***38715—திரு. ந. கணபதி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வானூர் தொகுதி, நானாக்கால்மேடு கிராமத்தில் ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டம், வானூர் ஊராட்சி ஒன்றியம், நானாக்கால்மேடு கிராமத்தில் புதிய ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

திரு. ந. கணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களை வணங்கி, எனது வானூர் தொகுதிக்குட்பட்ட நானாக்கால்மேடு என்ற கிராமத்தில் மக்கள் தொகை சுமார் 5,000 உள்ளது. இதைச் சுற்றி உள்ள குக்கிராமங்கள், கிளாப்பாக்கம், தலைகானிகுப்பம், காயல்மேடு, வங்காரம், காரட்டை, சித்தலப்பாக்கம், அரவடை, செட்டிச்சாவடி, கோமடிபட்டு, ஓபிப்பூர், வண்டிப்பாளையம், சொரப்பட்டில் வசிக்கும் மக்கள் மருத்துவ வசதிக்காக ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து தருவாரா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2005 மார்ச் 16]

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சரின் பதில் முடிகிற வரை கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானாக்கால்மேடு கிராமத்தில் கிட்டத்தட்ட 656 மக்கள் தொகை இருக்கிறது. உப்புவேலூருக்கு அருகிலே அரசு ஆரம்பச் சுகாதார நிலையம் இருக்கிறது. ஆகவே, இந்த மக்கள் தொகைக் கணக்கெடுப்பைப் பார்த்தாலும், அதேபோல, அங்கே இருக்கிற கிலோ மீட்டரை எடுத்துக்கொண்டாலும், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று, வருகிற நிதியாண்டிலே மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. நிதியொதுக்கச் சட்டமுன்வடிவை விவாதித்து நிறைவேற்றக் கோரல்

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி ஒதுக்க மசோதா அரசமைப்புச் சட்டத்தினுடைய 204–வது பிரிவின்கீழ்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. இல்லை. எஸ்.ஆர்.பி. அவர்கள், நிதி அமைச்சர் அவர்கள் வரட்டும். வந்த பிறகு அப்புறம் எடுத்துக்கொள்ளலாம்.

அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. (குறுக்கீடு)